RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt2038

# சிறுபாணாற்றுப்படை - எடுத்துரைப்பியல் நோக்கு

## மு. சங்கர் [அ, *]

[அ] தமிழியல் துறை, ஸ்ரீ காளீஸ்வரி கல்லூரி (தன்னாட்சி), சிவகாசி-626130, தமிழ்நாடு, இந்தியா.

# Cirupaanaatruppadai - Narratology View

## M. Sankar [a, *]

[a] Department of Tamil, Sri Kaliswari College (Autonomous), Sivakasi - 626130, Tamil Nadu, India.

Corresponding Author:
sankartamilskcgri@gmail.com

Received : 27-02-2020
Accepted : 08-05-2020

**ABSTRACT**

Today, Tamil Studies obtained evolution in multiple fields. These fields are mentioned in multiple departmental researchers and approaches. Narratology is a detailed explainary studies on Novels. This approach is already exists in 21st century onwards in developed countries. Similarly this approach is also followed by K.Panchangam and P.Maruthanayagam in Tamil. For example, Aatruppadai, Epic Literatures (Cillappathikaram, Manimekalai) and Ballads. Cirupaanaatruppadai is one of the Aatruppadai having 269 lines. It mentioned about Moovendar regime, Seven Chieftains Grants and Nalliyakkodan etc., Our aim is to use the Narratology Based Approach in Cirupaanaatruppadai.

**Keywords:** Narratology, Aatruppadai, Cirupaanaatruppadai

## About the Author

முனைவர் மு. சங்கர் அவர்கள் தமிழில் இளங்கலைப் பட்டத்தைச் சிவகாசி ஸ்ரீ காளீஸ்வரி கல்லூரியில் பெற்றவர். முதுகலை, ஆய்வியல் நிறைஞர் மற்றும் முனைவர் பட்டங்களைத் திண்டுக்கல் காந்தி கிராம கிராமியப் பல்கலைக்கழகத்தில் பெற்றவர். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் முதுகலை மொழியியல் பயின்றவர். இளங்கலை மற்றும் முதுகலையில் தங்கப்பதக்கம் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. மேலும், இவர் ஆய்வியல் நிறைஞர் பட்டத்திற்குத் திணை, பால், எண், இடப் பகுப்புகளில் பதிலிடுபெயர்கள் என்ற தலைப்பிலும் முனைவர் பட்டத்திற்கு நடையியல் நோக்கில் சங்க இலக்கியக் குறிஞ்சித்திணைப் பாடல்கள் என்ற தலைப்பிலும் ஆய்வு செய்தவர். பல்கலைக்கழக நிதி நல்கைக்குழு நடத்திய கல்லூரி உதவிப்பேராசிரியர் தகுதித் தேர்வில் (NET with JRF - 2013) தேர்ச்சி அடைந்துள்ளார். சங்க இலக்கியம், திறனாய்வு, மொழியியல் ஆகிய துறைகளில் ஈடுபாடு உடையவர். தமிழில் பதிலிடுபெயர்கள் (ஒரு வரலாற்று மொழியியல் ஆய்வு), இனவரைவியல் நோக்கில் சங்க இலக்கியக் குறிஞ்சித்திணைக் கவிதைகள், தொல்காப்பிய

ஆய்வடங்கல் ஆகிய மூன்று நூல்களை எழுதியுள்ளார். 20 க்கும் அதிகமான கட்டுரைகளை எழுதியுள்ளார். இவற்றுள் சில கட்டுரைகள் பல்கலைக்கழக நிதி நல்கைக்குழுவின் அங்கீகாரம் பெற்ற இதழ்களில் வெளிவந்துள்ளன. தற்போது சிவகாசி உள்ள ஸ்ரீ காளீஸ்வரி கல்லூரி (தன்னாட்சி)யில் உதவிப்பேராசிரியராகத் தமிழியல் துறையில் பணியாற்றி வருகின்றார்.

## ஆய்வுச் சுருக்கம்

தமிழியல் ஆய்வுகள் இன்று பல்வேறு பரிணாம வளர்ச்சியை அடைந்து வருகின்றன. அவற்றுள், பல்துறைச் சார்ந்த ஆய்வுகளும் பல்வேறு அணுகுமுறைகளைச் சார்ந்த ஆய்வுகளும் குறிப்பிடத்தக்கன. அவ்வகையில் எடுத்துரைப்பியல் அணுகுமுறையும் முக்கிய இடம் வகிக்கின்றது. தமிழில் 2000-க்குப் பிறகு தோற்றம் கொண்ட அணுகுமுறையாக இதனைக் குறிப்பிடலாம். இவ்வணுகுமுறையை, ஆய்வுமுறைப்படி விளக்கியவர்களுள் க.பஞ்சாங்கமும் ப.மருதநாயகமும் குறிப்பிடத்தக்கவர்கள். மேலைநாட்டில் எடுத்துரைப்பியல் ஆய்வு நீண்ட கதையமைப்பைக் கொண்ட பாடல்களிலும் நாவல்களிலும் இருந்தே தொடங்குகின்றது. அத்தயைதொரு விபரணை முறையைத் தமிழிலும் காணலாம். இதற்குத் தமிழில் உள்ள ஆற்றுப்படை நூல்களையும் காப்பியங்களையும் (சிலப்பதிகாரம், மணிமேகலை), கதைப்பாடல்களைம் அம்மானை இலக்கியங்களையும் சான்றாகப் பகரலாம். ஆற்றுப்படை நூல்களுள் சிறுபாணாற்றுப்படை பல்வேறு சிறப்புகளை உள்ளடக்கியது. ஏனெனில், மூவேந்தர்களின் ஆட்சி, கடையெழு வள்ளல்களின் படைமடமும் கொடைமடமும் நல்லியக்கோடன் என்ற வள்ளலின் (சிற்றரசன்) சிறப்பையும் குறிப்பிடுகின்றது. ஆய்வுக்கு எடுத்துக்கொண்ட சிறுபாணாற்றுப்படை 269 அடிகளைக் கொணட நீண்ட விபரணைத் தன்மை உடையது. இதில் அமைந்துள்ள எடுத்துரைப்பியல் கூறுகளை விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கம்.

## அறிமுகம்

இலக்கியம் படைப்பாளனுக்கும் வாசகனுக்கும் இடையே கருத்துப்பரிமாற்றத்திற்கான ஓர் ஊடகமாகச் செயல்படுகின்றது. ஆனால், எடுத்துரைப்பியல் படைப்பாளனையோ வாசகனையோ கருத்தில் கொள்வதில்லை. மாறாக, படைப்புக்குள் காணப்படும் உட்கிடக்கையைக் கருத்தில் கொள்கின்றது. இதனால், எடுத்துரைப்பியல் படைப்பாளனையோ வாசகனையோ மையப்படுத்தாமல் படைப்பின் கருத்தாடலையே (Discourse) மையப்படுத்துகின்றது. 'Narratology' என்று ஆங்கிலத்தில் அழைப்பதையே தமிழில் 'எடுத்துரைப்பியல்' என்ற பதத்தால் குறிப்பிடுகின்றோம். இது கவிதையில் அல்லது கதையில் அமையும் நீண்ட விபரணை தன்மையைக் குறிக்கும். மனிதனின் உணர்வைப் பாதிக்கும் வழிகளில் இதுவும் ஒன்று. இது முதலில் பிரெஞ்சு கதைகளை ஆங்கிலமயமாக்கும் சூழலில் ட்வெட்டன் டோடோரோவ் என்பவரால் உருவாக்கப்பட்டது. அதன் தத்துவார்த்த பரம்பரையைக் கிரேக்கத்தில் அரிஸ்டாட்டடிலிடம் இருந்து காணலாம். ஆனால், நவீன எடுத்துரைப்புத் தன்மையினை ரஷ்ய அமைப்பியலாளரான விளாடிமிர்

பிராப்பிடமும் மைக்கேல் பக்தினிடமும் காணலாம். பக்தினின் ஹீட்டோரோகுளோசியா, உரையாடல் கற்பனை ஆகியவற்றில் எடுத்துரைப்பியல் பாங்கினைக் காணலாம். இதிலிருந்துதான் எடுத்துரைப்பியல் என்ற சிந்தனைத் தளம் உருவானது எனலாம். இச்சிந்தனை பற்றி 1966 இல் வெளிவந்த 'Communication' என்ற இதழில் பலர் கட்டுரை எழுதினர். அதில் ரோலன் பார்த், கிளாட்ப்ரேமண்ட், ஜெனெட், கிரேமாஸ், டோடோரோவ் ஆகியோரைக் குறிப்பிடலாம். இவர்கள் அனைவரும் விளாடிமிர் பிராப்பின் ஆய்வுகளை அடிப்படையாகக் கொண்டே ஆராய்ந்தனர். எடுத்துரைப்பியல் என்ற சிந்தனைத் தளம் ரஷ்ய நாட்டில் அமைப்பியல் ஆய்வு தோற்றம் கொண்டபோது தோன்றியது. அமைப்பியல் சிந்தனையையும் குறியியல் சிந்தனையையும் (Semiotics) அடிப்படையாகக் கொண்டு நாவல், காப்பியம், சுயசரிதை ஆகியவற்றில் எடுத்துரைப்பின் கட்டமைப்பு எவ்வாறு அமைந்துள்ளது என்பதை விளக்கினர். மேலும், எடுத்துரைப்பியலில் உள்ள காலம் சார்ந்த தொடரொழுங்கையும் காரண காரியத் தொடரொழுங்கையும் விளக்கினர். எடுத்துரைப்பியல் ஆய்வில் கவிதையின் புலப்பாட்டுநெறி எவ்வாறு உள்ளது?, கவிதையின் அழகியல் சார்ந்த நிலை எவ்வாறு உள்ளது?, இலக்கணம் சார்ந்த எடுத்துரைப்பு எவ்வாறு உள்ளது? என்பதையெல்லாம் விளக்கியுள்ளனர். மேலும், ஒரு படைப்பின் பொருள் சார்ந்த விடயங்களை ஆய்வுக்கு உட்படுத்துதல், அப்படைப்பின் உள்ளடக்கம், வடிவம், உத்தி, அடிக்கருத்து, பிற இலக்கணக் கூறுகளை ஆய்வுக்கு உட்படுத்துதல் என்ற இருநிலைகளில் எடுத்துரைப்பியல் விளக்கப்படுவதைக் காணலாம். பத்துப்பாட்டு நூல்களுள் நீண்ட விரிவான கதை அம்சம் (Plot) உடையதில் ஆற்றுப்படை நூல்களுக்கு முக்கியப் பங்குண்டு. ஏனெனில் ஆற்றுப்படை நூல்களின் அடிக்கருத்து, 1. கூத்தர், பாணர், பொருநர், விறலியர் ஆகியோரை ஆற்றுப்படுத்துதல் 2. பெற்ற பெருவளத்தைக் கூறுதல் 3. அறிவுறுத்துதல் என்ற மூன்று நிலைகளில் அமைந்துள்ளமையைக் காணலாம். இரவலனைத் தகுந்த வள்ளலிடம் நெறிப்படுத்துவதே ஆற்றுப்படை நூல்களின் கரு. இதில் கூத்தர், பாணர், பொருநர், விறலியர் ஆகியோர் கதைமாந்தர்கள். இக்கட்டுரை பத்துப்பாட்டு நூல்களுள் ஒன்றான சிறுபாணாற்றுப்படையின் எடுத்துரைப்பியல் கூறுகளை விளக்குவதாக அமைகின்றது.

## எடுத்துரைப்பியல் கூறுகள்

எடுத்துரைப்பியல் திறனாய்வு பற்றி ஆராய்ந்த க.பஞ்சாங்கம் (நவீனக் கவிதையியல் - எடுத்துரைப்பியல் நோக்கு, காவ்யா, 2003), த.சரவணன் (எடுத்துரைப்பியல் நோக்கில் பாரதியார் கதைகள், 2010), கி.சிவா (பத்துப்பாட்டின் எடுத்துரைப்பியல், 2015), பா.ஆனந்தகுமார் (முல்லைப்பாட்டின் எடுத்துரைப்பியல், சான்லக்ஸ் பன்னாட்டுத் தமிழாய்வு இதழ், 2016), ப.உமாமகேஸ்வரி (ஊடலில் எடுத்துரைப்பியல், சான்லக்ஸ் பன்னாட்டுத் தமிழாய்வு இதழ், 2017), கி.வசந்தகுமார் (எடுத்துரைப்பியல் நோக்கில் நற்றிணை - குறிஞ்சித்திணையில் பின்புலம், வல்லமை, 2018), ப.மருதநாயகம் (எடுத்துரைப்பியல்: பூமணியின் வெக்கை, 2019), உள்ளிட்டோர் எடுத்துரைப்பியல் கூறுகள் சிலவற்றைக் குறிப்பிட்டுள்ளனர் (Panchangam, 2003; Saravanan, 2010; Siva, 2015; Anandakumar, 2016; Umamaheswari, 2017; Vasanthakumar, 2018; Maruthanayakam, 2019).

இக்கட்டுரை சிறுபாணாற்றுப்படையின் எடுத்துரைப்பியல் கூறுகள் சிலவற்றைக் கண்டறிந்துள்ளது. அவை: 1. விவரிப்புக் கூறுகள் 2. கதைமாந்தரை அடையாளப்படுத்தும் தன்மை 3. நிகழ்ச்சிகளின் ஒழுங்கு 4. காலம் 5. கதைக்கோப்பு 6. முரண் அமைப்பு 7. மொழிக் குறியீடுகள் அ) உம் இடைச்சொல் ஆ) உவமைநயம் இ) தொடைநயம் 8. பனுவலில் பேச்சு பெறும் இடம் 9. படைப்பும் வழக்குச் சொற்களும் என்பனவாகும்.

## விவரிப்புக் கூறுகள்

அழகியல் ரீதியாக அமைந்த எடுத்துரைப்பியல் கூறே விவரிப்பு. விவரிப்பு என்பது ஒரு பொருளின் தன்மையினை அல்லது ஒன்றின் செயலை விளக்கிப் பேசுவதாகும். அதாவது, ஒரு செயல், அச்செயலுக்கான காரணங்கள், அச்செயலுக்கான பின்னணி, அச்செயல் வெளிப்படுத்தும் உண்மை ஆகியவற்றை விளக்கக்கூடிய ஒரு தொகுப்பே ஆகும். சிறுபாணாற்றுப்படையில் விறலியை வருணித்தல், இசைக்கருவிகளை வருணித்தல், சிறுபாணன் செல்லும் வழியை விவரித்தல், செல்லும் வழிகள், அங்குள்ள மக்கள் பற்றிக் கூறல் உள்ளிட்டவற்றைக் காணலாம். சிறுபாணனின் உடன் வரும் விறலி வறுமையினாலும் வழிநடைத் துன்பத்தாலும் வருந்தியிருக்கும் நிலையில், அவளது பேரெழில் படைப்பாளரால் வருணிக்கப்படுகின்றது. **ஐதுவீழ் இகுபெயில் அழகுகொண்டு அருளி/ நெய்கனிந்து இருளிய கதுப்பின், கதுப்பென/ மணிவயின் கலாபம், பரப்பி, பலஉடன்/ மயில் மயிற் குளிக்கும் சாயல், சாஅய்/ உயங்குநாய் நாவின் நல்எழில் அசைஇ/ வயங்குஇழை உலறிய அடியின் (சிறுபாணா.13 - 18)** என்றவாறு விறலியின் எழில் நல்லூர் நத்தத்தனாரால் வருணிக்கப்படுகின்றது. சிறுபாணன் கொண்டு சென்ற சீறியாழை உவமை வாயிலாகப் படைப்பாளர் எடுத்துரைக்கும் தன்மைப் பாராட்டற்குரியது. **பொன்வார்ந் தன்ன புரிஅடங்கு நரம்பின்/ இன்குரல் சீறியாழ் (சிறுபாணா.34, 35)**. மேலும், சீறியாழைச் சிறுபாணன் வாசித்த திறத்தைக் குறிப்பிடுகையில் விவரிப்புத் தன்மை இடம்பெறுவதைக் காணலாம். **பைங்கண் ஊக்கம் பாம்பு பிடித்தன்ன/ அம்கோட்டுச் செறிந்த அவிழ்ந்துவீங்கு திவவின்/ மணிநிரைத் தன்ன வனப்பின் வாய்அமைத்து/ வயிறுசேர்பு ஒழுகிய வகை அமை அகளத்து/ கானக் குமிழின் கனிநிறம் கடுப்ப/ புகழ்வினைப் பொலிந்த பச்சையொடு தேம்பெய்து/ அமிழ்து பொதிந்து இலிற்றும் அடங்குபுரி நரம்பின்/ பாடுதுறை முற்றிய பயன்தெரி கேள்விக்/ கூடுகொள் இன்இயம் குரல்குரல் ஆக (சிறுபாணா.221 - 229)**. இதில் யாழின் வார்க்கட்டு, ஆணிகள், பத்தர், நரம்புகள் ஆகியவை படைப்பாளரால் வருணிக்கப்பட்டுள்ளமையைக் காணலாம்.

## கதைமாந்தரை அடையாளப்படுத்தும் தன்மை

எடுத்துரைப்பியல் கூறுகளுள் படைப்பாளர் கதைமாந்தரை அடையாளப்படுத்தும் தன்மை இன்றியமையாதது. சிறுபாணாற்றுப்படையில் நல்லியக்கோடனை அடையாளப்படுத்துவதற்கு முன்பே, மூவேந்தர்களான சேர, சோழ, பாண்டியர்கள் வலிமை குன்றிய நிலையில் இருத்தலையும் பேகன், பாரி, காரி, ஆய், அதியமான், நள்ளி, ஓரி

உள்ளிட்ட கடையெழு வள்ளல்கள் இல்லாத நிலையையும் குறிப்பிடுகின்றார் நத்தத்தனார். நல்லியக்கோடனின் கொடைச் சிறப்பைக் குறிப்பிடுவதற்கு, முன்னர் கூறிய இந்நிகழ்வுகள் துணைமை நிகழ்ச்சிகளாக அமைந்துள்ளன. நல்லியக்கோடனின் தலைமைச் சிறப்பை, ........ **போக்குஅரு மரபின்/ தொல்மா இலங்கைக் கருவொடு பெயரிய/ நல்மா இலங்கை மன்ன ருள்ளும்/ மறுஇன்றி விளங்கிய வடுஇல் வாய்வாள்/ உறுபுலித் துப்பின் ஓவியர் பெருமான்/ களிற்றுத் தழும்பு இருந்த கழல்தயங்கு திருந்துஅடி/ பிடிக்கணம் சிதறும் பெயல்மழைத் தடக்கை/ பல்இயம் கோடியர் புரவலன் பேரிசை/ நல்லியக் கோடனை நயந்த கொள்கையொடு** (117 - 126) என்ற அடிகளில் காணலாம். இதில் இலங்கையை ஆட்சி செய்த மன்னருள்ளும் மாவிலங்கை எனும் நகரை ஆட்சி செய்த மன்னருள்ளும் குற்றமற்ற பழித்தல் இல்லாத வாளினையும் புலியைப் போன்ற வலிமையையும் உடைய நல்லியக்கோடன் ஓவியர் குடியில் பிறந்தவன் என்று அடையாளப்படுத்தப்படுவதைக் காணலாம்.

## நிகழ்ச்சிகளின் ஒழுங்கு

ஒரு படைப்பாளனின் படைப்பு வெற்றி பெறுவது என்பது, அவன் நிகழ்ச்சிகளை ஒழுங்குமுறைப்படி அமைத்துக் கொண்டுள்ள தன்மையாலேயே அமையும். இது எடுத்துரைப்பியல் ஆய்வில் முக்கிய இடம்பெறுகின்றது. ஒரு பனுவலை உருவாக்கும் படைப்பாளன், அப்பனுவலை உருவாக்க பல்வேறு நிகழ்ச்சிகளை அமைக்கின்றான். அந்தவகையில், நல்லியக்கோடனின் கொடைத் தன்மையையும் வீரத்தையும் புனைந்து கூறுவதையே கருவாகக் கொண்ட சிறுபாணாற்றுப்படையில் அதனை விளக்கும் நிகழ்ச்சி ஒழுங்கு 203 முதல் 269 அடிகளில் கூறப்படுகின்றது. இதற்குத் துணையாக பாலை நிலத்தின் கொடிய தன்மை, விறலியின் வழிநடைத் துயரம், சிறுபாணன் தனது வறுமையினை இசையின் மீது கொண்ட ஈடுபாட்டால் மறந்திருக்கும் நிலை, மூவேந்தர்கள் வலிமை குன்றிய நிலை, கடையெழு வள்ளல்கள் இல்லாத நிலை, நல்லியக்கோடனைக் காணும் முன்பிருந்த பாணனின் வறுமைநிலை, அவனைக் கண்டபின்பு பெற்ற பெருவளம், எயிற்பட்டினம், வேலூர், ஆமூர் ஆகிய மூன்று நகரங்களில் கிடைக்கும் வரவேற்பு முதலியவை அமைந்துள்ளன. இதில் ஒருவகையான நிகழ்ச்சி ஒழுங்குமுறை கடைபிடிக்கப்பட்டுள்ளமையைக் காணலாம். இது பற்றி ம.திருமலை கூறும் கருத்தையும் ஒப்புநோக்க வேண்டும். சிறுபாணாற்றுப்படையின் தொடக்க முதல் இறுதி வரை எவ்விதமான பிறழ்வுமின்றி நிகழ்ச்சிகள் ஒரு சீர்மையாக இடம்பெற்றிருக்கின்றன (2007:146) என்ற ம.திருமலையின் கருத்தும் இவண் குறிப்பிடத்தக்கது (Thirumalai, 2007).

## காலம்

எடுத்துரைப்பியலில் காலம் என்பது கதையை உருவாக்கக்கூடிய நிகழ்ச்சிகளைப் பனுவலாக ஒழுங்கு முறைப்படுத்தப் பயன்படுகிறது. புகழ்பெற்ற புனைகதைகள் பலவற்றில் இந்தக் காலம் என்பது “திரும்பத் திரும்ப நிகழ்கின்ற ஒரு கருவாகக்” கூடத் தொடர்கிறது.

மேலும், செல்லுகின்ற கருவியாகிய மொழியை வடிவமைப்பதும் கூட காலம்தான். எனவே, எடுத்துரைப்பியலில் பனுவல் - காலம் என்ற ஒரு கோணம் இன்றியமையாத இடம்பெறுகின்றது (2004:63) எனப் பனுவலுக்கும் காலத்திற்கும் இடையேயான தொடர்பினைக் க.பஞ்சாங்கம் குறிப்பிடுகின்றார் (Chandrasekaran *et al.,* 2004; Panchangam, 2012). சிறுபாணாற்றுப்படையிலும் இந்தக் கால ஒழுங்கு இடம்பெறுவதைக் காணலாம். நல்லியக்கோடனின் கொடை மற்றும் வீரத்தன்மையைக் குறிப்பிட நத்தத்தனார் ஆற்றுப்படை என்ற இலக்கிய வகையை எடுத்துக்கொண்டு, சிறுபாணனின் வறுமைநிலையையும் அதனை நீக்க நல்லியக்கோடன் என்ற வள்ளல் இருக்கின்றான் என்பதைக் கூறுகின்றார். ஆற்றுப்படைக்குரிய பெற்ற பெருவளம் பெறாஅர்க்கு அறிவுறுத்தும் பாங்கில், ஏற்கனவே வறுமையில் வாடிய ஒரு பாணனின் நிலையை நத்தத்தனார் படைத்துக்காட்டுகின்றார். இதனை, ........... **இந்நாள்/ திறவாக் கண்ண சாய்செவிக் குருளை/ கறவாப் பால்முலை கவர்தல் நோனாது/ புனிற்றுநாய் குரைக்கும் புல்லென் அட்டில்/ காழ்சோர் முதுசுவர்க் கணச்சிதல் அரித்த/ பூழி பூத்த புழல் காளாம்பி (சிறுபாணா.**129 - 134**)** என்ற அடிகளின் வழி உணரலாம். இவ்வாறு ஒரு பாணன் தன் வாழ்வில் ஏற்பட்ட வறுமைநிலையையும் அதனைப் போக்கிய வள்ளலாகிய நல்லியக்கோடனின் கொடைச் சிறப்பையும் கூறி ஆற்றுப்படுத்துகின்றான். இதில் கால ஒழுங்கு தெளிவாக அமைந்துள்ளமையை அறியலாம்.

## கதைக்கோப்பு

கதைக்கோப்பு என்பது நிகழ்ச்சிகளைக் காரண - காரிய முறைப்படி அமைப்பதாகும். இது நிகழ்ச்சி ஏன் நடந்தது? என்ற ஆவலை வாசகர்க்கு ஏற்படுத்தும். அதாவது, கதைக்கருவைச் சுவையாக விவரித்துக் கூறி, நன்முறையில் பனுவலை முடிப்பதாகும். பனுவலைத் தொடக்கம் முதல் இறுதி வரை படைப்பாளர் சுவை குன்றாமல் காட்டவேண்டும். கதைக்கோப்பு பற்றிச் சு.பாலசந்திரன் குறிப்பிடுகையில், நிகழ்ச்சிகளின் போக்கானது கதை என்றால், இந்நிகழ்ச்சிகள் காரண காரியப்படி நிகழ்வதைக் கதைக்கோப்பு (Plot) எனலாம் (2007:195) என்கின்றார் (Balachandran, 2007)]. சிறுபாணாற்றுப்படையின் கதைக்கோப்புப் பின்வருமாறு அமைந்துள்ளது. 1. பாலை நிலத்தின் கொடுமை 2. விறலி மற்றும் பாணனின் வழிநடைத் துயரம் 3. உலகத்தைக் கொடைத்தன்மையால் புரக்கும் மூவேந்தர்களும் கடையெழு வள்ளல்களும் இல்லை என்பதைக் குறிப்பிடல் 4. நெய்தல் நிலமான எயிற்பட்டினம் அளிக்கும் விருந்தோம்பல் 5. முல்லை நிலமான வேலூரில் கிடைக்கும் வரவேற்பு 6. மருத நிலமான ஆமூரில் கிடைக்கும் உபசரிப்பு 7. மாவிலங்கை நகரத்தின் வளமை 8. நல்லியக்கோடனின் கொடை மற்றும் வீரம் முதலிய சிறப்புகள் 9. நல்லியக்கோடனின் கொடை வளம் இவ்வாறாகச் சிறுபாணாற்றுப்படையின் கதைக்கோப்புக் காரண காரிய முறைப்படி அமைந்துள்ளமையை உணரலாம். நல்லியக்கோடனின் கொடைத் தன்மைக்கு முன்னுரை கூறுவது போல் எயிற்பட்டினம், வேலூர், ஆமூர் ஆகிய இடங்களில் கிடைக்கும் விருந்தோம்பல் எனும் அறச்செயல் அமைகின்றது. மன்னன் வழியே அவன் ஆட்சி செய்யும் நகர மக்களின் ஒழுகலாறும் நத்தத்தனாரால் படைத்தளிக்கப்பட்டுள்ளது சிறப்பிற்குரியது.

## முரண் அமைப்பு

சிறுபாணாற்றுப்படையில் முரண் அமைப்பு இடம்பெறுவது அதன் தனிச்சிறப்பு. இப்பனுவலனின் தொடக்கத்தில் சிறுபாணனும் விறலியும் நடந்து வரும் பாலைநிலத்தின் கொடுமை கூறப்படுகின்றது. ஆனால், நல்லியக்கோடனின் நகரத்திற்குள் நுழைந்தவுடன், **அண்ணல் யானை அருவிதுகள் அவிப்ப: நீறுஅடங்கு தெருவின் அவன்சாறு அயர்மூதூர் (சிறுபாணா.**200, 201) அமைந்துள்ளமைக் காட்டப்படுகின்றது. மேலும், வறிய சிறுபாணன் **பாலை நின்ற பாலை நெடுவழியைக் (சிறுபாணா.**11) கடந்து வருகின்றான். இதற்கு மறுதலையாக நல்லியக்கோடனின் நகரம், **சேய்த்தும் அன்று சிறிது நணியதுவே (சிறுபாணா.**202) என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறு நிகழ்ச்சிகளை அமைக்கும்போது வழிநடை துயரத்தாலும் வறுமையாலும் துன்பமடைந்த சிறுபாணனின் மனநிலைக்கு ஒருவகையாக நம்பிக்கையூட்டுவதாக இம்முரண் அமைப்பு அமைவதைக் காணலாம்.

## மொழிக் குறியீடுகள்

சிறுபாணாற்றுப்படையில் இடம்பெறும் ‘உம்’ இடைச்சொல் ஒரு தொடரையும் இன்னொரு தொடரையும் இணைக்கும் இணைப்பானாகச் செயல்படுகின்றது. நீண்ட நெடுந்தொடர்களை உருவாக்க ‘உம்’ இடைச்சொல் படைப்பாளரால் கையாளப்பட்டுள்ளது. நல்லியக்கோடனின் மாவிலங்கை நகரத்தின் வாயிலின் சிறப்பையும் அவன் குணத்தையும் குறிப்பிட ‘உம்’ இடைச்சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. இதனை, **பொருநர்க்கு ஆயினும் புலவர்க்கு ஆயினும்/ அருமறை நாவின் அந்தணர்க்கு ஆயினும் (சிறுபாண.**203,204) என்ற அடிகளிலும் **செய்ந்நன்றி அறிதலும் சிற்றினம் இன்மையும்/ இன்முகம் உடைமையும் இனியன் ஆதலும்/ செறிந்துவிளங்கு சிறப்பின் அறிந்தோர் ஏத்த/ அஞ்சினர்க்கு அளித்தலும் வெஞ்சினம் இன்மையும்/ ஆண்அணி புகுதலும் அழிபடை தாங்கலும்/ வாள்மீக் கூற்றத்து வயவர் ஏத்த (சிறுபாண.**207 - 211) என்ற அடிகளில் காணலாம். இங்கு நல்லியக்கோடனின் குணநலன்கள் உம் இடைச்சொல்லின் ஆட்சியால் தொடர்ந்து கூறப்படுவதைக் காணலாம்.

அடுத்து, சிறுபாணாற்றுப்படையில் இடம்பெறும் மற்றொரு மொழிக்குறியீடு உவமைநயம் ஆகும். இப்பனுவலில் போல, அன்ன என்ற உவமஉருபுகள் வெளிப்படையாகப் பயின்று வந்து பொருளின் தன்மையைப் புலப்படுத்திக் காட்டுகின்றன. இதற்குச் சான்றாகச் சிறுபாணனின் கையில் வைத்துள்ள சீறியாழைப், **பொன்வார்ந் தன்ன புரிஅடங்கு நரம்பின்/ இன்குரல் சீறியாழ் (சிறுபாணா.**34,35) என உவமை வழிக் குறிப்பிட்டுள்ளமையைச் சிறப்பு. மேலும், நல்லியக்கோடன் அவையில் வீற்றிருக்கும் பாங்கினை வெளிப்படுத்துவதற்குப் **பல்மீன் நடுவண் பால்மதி போல/ இன்நகை ஆயமொடு இருந்தோன் குறுகி (சிறுபாணா.**219,220) என்ற உவமை கையாளப்பட்டுள்ளது.

சிறுபாணாற்றுப்படையில் இரு விகற்ப எதுகைத் தொடையின் அமைப்பை அதிகமாகக் காணலாம். அதாவது முதலிரண்டு அடிகள் ஒரெதுகையையும் அடுத்த இரண்டு அடிகள் ஒரெதுகையையும் பயின்று வந்து இனிமையையும் அழகான ஓசைநயத்தையும் தருகின்றது.

சான்றாகச் சில அடிகளைக் காட்டலாம். **துகில்அணி அல்குல் துளங்குஇயல் மகளிர்/ அகில்உண விரித்த அம்மென் கூந்தலின்/ மணிமயில் கலாபம் மஞ்சுஇடைப் பரப்பி/ துணிமழை தவழும் துயல்கழை நெடுங்கோட்டு/ எறிந்துஉரும் இறந்த ஏற்றுஅருஞ் சென்னிக்/ குறிஞ்சிக் கோமான் கொய்தளிர்க் கண்ணி/ செல்இசை நிலைஇய பண்பின்/ நல்லியக் கோடனை நயந்தனிர் செலினே (சிறுபாண.263 - 269)** இவ்வடிகளில் இரு விகற்பத்தால் வந்த எதுகைத் தொடையினைக் காணலாம். இவற்றில் நல்லியக்கோடனின் புகழும் பண்பும் குறிப்பிடப்பட்டுள்ளன. மேலும், இப்பனுவலில் செந்தொடையின் ஒரு பிரிவான அந்தாதி தொடை பயின்று வந்துள்ளதை 13 ஆம் அடி முதல் 33 அடி வரை அமைந்துள்ள விறலியின் வருணனையில் காணலாம். இதனை, **உயங்குநாய் நாவின் நல்எழில் அசைஇ/ வயங்குஇழை உலறிய அடியின் அடிதொடந்து/ ஈர்ந்துநிலம் தோயும் இரும்பிடித் தடக்கையின்/ சேர்ந்து உடன் செறிந்த குறங்கின் குறங்கென (சிறுபாணா.17 - 20)** என்றவாறு வரும் அடிகளில் காணலாம்.

## பனுவலில் பேச்சு பெறும் இடம்

எடுத்துரைப்பியலில் பேச்சு இன்றியமையாத இடம்பெறுகின்றது. இப்பேச்சு, சங்க இலக்கியத்தில் நேரடியாகப் பேசும்நிலையிலும் குறிப்பாகப் பேசும்நிலையிலும் வெளிப்படுவதைக் காணலாம். மிகைல் பக்தின் என்ற பின்னமைப்பியலாரின் கருத்துப்படி, ஒரு பனுவலுக்குள் பன்முகப்பட்ட சொல்லாடல்கள் உள்ளன (2004:65) என்கின்றார். இப்பேச்சு, மனிதத் தகவல் தொடர்பை அடிப்படையாகக் கொண்டு செயல்படக்கூடியது. ஆர்.ஜெயராமன் பேச்சின் இயல்பு பற்றிக் கூறுகையில், கதையில் பாத்திரங்களுக்கு இடையில் உரையாடல் அமையும்போது கதைகூறும் வேலையிலிருந்து கதை ஆசிரியன் விலகிக் கொள்கிறான். பாத்திரங்கள் தங்கள் கதையைத் தாங்களே கூறுவதாக அமைந்து விடுகின்றன. கதையின் நம்பகத்தன்மை இதனால் கூடுகின்றன (2009:397) என்கின்றார் (Balasubramaniyan et al., 2009). இவர் கூறும் இக்கருத்து, செய்யுள் வடிவில் அமையும் பனுவலுக்கும் பொருந்தும். சிறுபாணாற்றுப்படையில் இப்பேச்சு உரையாடல் வழி வெளிப்படுவதைக் காணலாம். இவ்வுரையாடல் சிறுபாணனை ஆற்றுப்படுத்தும் நோக்கில் அமைந்துள்ளது. சிறுபாணனும் விறலியும் வழிநடைத் துயரத்தால் வருந்தியிருக்கும் நிலையில் சிறுபாணன் தனது சீறியாழில் நைவளம் எனும் பண்ணை வாசித்துக் கொண்டிருக்கும் சூழலில் அவ்விடம் வந்த சிறுபாணன் ஒருவன், அவனை, **முனிவு இகந்திருந்த முதுவாய் இரவல (சிறுபாணா.40)** என்று விளித்துக் கூறத் தொடங்குகின்றான். அவ்வாறு அவன் கூறும்போது, மூவேந்தர்கள் இன்மையையும் கடையெழு வள்ளல்கள் இன்மையையும் குறிப்பிட்டு, நல்லியக்கோடனின் தலைமைச் சிறப்பையும் குறிப்பிட்டு, அவன் இரவலரைப் புரக்கும் தன்மையையும் கூறி, தன் வாழ்க்கையில் இருந்த வறுமைநிலையையும் எடுத்துக்கூறி, நல்லியக்கோடன் என்ற வள்ளலிடம் சென்றதால் எங்கள் வறுமைநிலை மாறியது என்று கூறி ஆற்றுப்படுத்துகின்றான். இவை அனைத்தும் முன்னிலையிடத்துக் கூறுவனாவாக அமைந்துள்ளன. இதனைச், **சிறுகண் யானையொடு பெருந்தேர் எய்தி/ யாம்அவண்**

**நின்றும் வருதும் நீயிரும்/ இவண்நயந்து இருந்த இரும்பேர் ஒக்கல்/ செம்மல் உள்ளமொடு செல்குவீர் ஆயின் (சிறுபாணா.142 - 145)** என்ற அடிகளில் காணலாம்.

## படைப்பும் வழக்குச் சொற்களும்

ஒரு படைப்பாளின் படைப்பு வெற்றிப் பெறுவதற்கு முக்கியக் காரணியாக அமைவது வழக்குச் சொற்களைச் செம்மையாகப் பயன்படுத்துவதே ஆகும். அப்போதே அப்படைப்பு வெற்றி அடையும் எனலாம். இது பற்றிப் ப.மருதநாயகம் குறிப்பிடுகையில், எந்தெந்தச் சூழல்களில் எந்தெந்தப் பாத்திரங்கள் வட்டார வழக்கைக் கையாள வேண்டும் என்பதைப் படைப்பாளர் தெரிந்திருத்தல் வேண்டும். வட்டார வழக்கினைக் கலைநுட்பத்தோடு கையாளும் திறன் பெற்ற படைப்பாளரே வெற்றி பெறுவர் (2019:418) என்கின்றார். இக்கூற்றுச் சிறுபாணாற்றுப்படைக்கும் பொருந்தும். சிறுபாணாற்றுப்படையில் நல்லூர் நத்தத்தனார் வஞ்சி, மதுரை, உறந்தை நகரங்களைக் குறிப்பிடும்போதும் எயிற்பட்டினம், வேலூர், ஆமூர் ஆகிய பகுதிகளை விளக்கும்போதும் வட்டார வழக்கினையே பயன்படுத்துகின்றார். வஞ்சி நிலப் பகுதியைக் காட்டும்போது வள்ளிதழ்க் கழுநீர், எருமை, மஞ்சள் ஆகியவற்றையும் மதுரை நிலப்பகுதியைக் குறிப்பிடும்போது பகடு, உமணர், உமட்டியர், கிலுகிலி ஆகியவற்றையும் உறந்தையைப் பற்றிக் குறிப்பிடும்போது தாமரை, கொட்டை, தும்பி ஆகியவற்றையும் எயிற்பட்டின நிலப்பகுதியைக் குறிப்பிடும்போது தாழை, அன்னம், முண்டகம், புன்னை, கானல், நித்திலம், மணல், நெய்தல் பண், நுளைமகள், பரதவர், குழல் மீன் முதலியவற்றையும் வேலூர் வளத்தைக் குறிப்பிடும்போது அவரை, முசுண்டை, காந்தள், எயிற்றியர், ஆமான் ஆகியவற்றையும் ஆமூர் நிலப்பகுதியைச் சுட்டும்போது காஞ்சி, குட்டம், கயல், சிரல், பகடு, உழவர், உலக்கை, அலவன், வெண்சோறு முதலியவற்றையும் நல்லூர் நத்தத்தனார் வட்டாரப் பகுதிகளுக்கு ஏற்றவாறு பயன்படுத்தியுள்ளார். இவ்வழக்குச் சொற்கள் கருப்பொருட்கள் அடிப்படையில் வேறுபடக் காணலாம்.

## முடிவுரை

இக்கட்டுரையின் நிறைவாக, பனுவலுக்குள் காணப்படும் உட்கிடக்கையை எடுத்துரைப்பதாக அமையும் எடுத்துரைப்பியலில் அழகியல் ரீதியாக அமைந்த விவரிப்பும் கதைமாந்தரை அடையாளப்படுத்தும் தன்மையும் நிகழ்ச்சிகளின் ஒழுங்கும் காலமும் நிகழ்ச்சிகளைக் காரண காரிய முறைப்படி அமைக்கும் கதைக்கோப்பும் முரணமைப்பும் மொழிக்குறியீடும் உரையாடலும் சிறுபாணாற்றுப்படையில் அமைந்துள்ள பாங்கும் இக்கட்டுரையில் விளக்கப்பட்டுள்ளன.

**இக்கட்டுரையில் கண்டறியப்பட்டுள்ள முடிவுகளாவன:**

1. சிறுபாணாற்றுப்படை என்ற பனுவலுக்குள் புதைந்து கிடந்த அழகியல் கூறுகள், விபரணைத் தன்மைகள் கண்டறியப்பட்டுள்ளன.
2. நிகழ்ச்சிகளை விரிவாகக் கூற விளம்புவதே எடுத்துரைப்பியலின் நோக்கம். அந்தவகையில் பார்த்தோமேயானால், சிறுபாணாற்றுப்படையில் பாணர் செல்லும்

பாலை நிலத்தின் தன்மையில் இருந்து பாணர்களுக்கு எயிற்பட்டினம், வேலூர், ஆமூர் நகரங்களில் கிடைக்கும் விருந்தோம்பல் வரை நிகழ்ச்சிகள் விரிவாகக் கூறப்பட்டுள்ளன.

3. நல்லியக்கோடன் என்ற வள்ளலை அடையாளப்படுத்தும் முன்பே நல்லூர் நத்தத்தனார் இரவலர்களைப் புரக்கக்கூடிய மூவேந்தர்கள் இன்மையையும் கடையெழு வள்ளல்கள் இன்மையையும் பதிவிடுகின்றார். காரணம் நல்லியக்கோடனின் கொடைத்தன்மையை விரிவாகக் கூறும் பொருட்டேயாகும்.
4. சிறுபாணாற்றுப்படையில் கதைக்கோப்பு எவ்விதப் பிறழ்வுமின்றி ஒரே சீர்மையாகப் பயணிப்பதைக் காணமுடிகின்றது.
5. இறந்த காலத்தை நிகழ் காலத்தோடு தொடர்புபடுத்தும் விதமாகப் பாணரின் வறுமைநிலையும் நல்லியக்கோடனின் கொடைத்திறமும் அமைந்துள்ளன.
6. மிகையில் பக்தின் கூற்றுப்படி, ஒரு பனுவலுக்குள் பல்குரல் தன்மை காணப்படும் என்பது நீண்ட விபரணை உடைய சிறுபாணாற்றுப்படைக்கும் பொருந்தி வருகின்றது. பாணனை ஆற்றுப்படுத்தும் நோக்கில் உரையாடல் (Discourse) என்ற கூறு இடம்பெறுகின்றது. இவ்வுரையாடல் மூலக்கருத்தை நோக்கியே அமைந்துள்ளது.
7. நல்லூர் நத்தத்தனார் இடைக்கழி நாட்டைச் சேர்ந்தவராக இருந்தாலும் அவரது படைப்பில் மருதம், நெய்தல், பாலை நில மக்களின் இருப்பிடச்சூழல் மிக நேர்த்தியாகக் கதைப்பின்னலுக்கு ஏற்றவாறு அமைக்கப்பட்டுள்ளன.

## References


Anandakumar, B., (2016), Mullaipatin Eduthuraipiyal, Shanlax International Journal of Tamil Studies, 1, 1-7.

Balachandran, S., (2007), Literary Performance (10th Edition), New Century Book House Lts, Chennai.

Balasubramaniyan et al., (2009), Silapathikaram-A Multi Faceted Vision (First Edition), National Conference, Conducted by Central Institute of Classical Tamil, Chennai, India and NGM Arts and Science College, Pollachi, India.

Chandrasekaran et al., (2004), Tamil Literary Principles (First Edition), Tamil Department Publication Division, Bharathiar University, Coimbatore, India.

Maruthanayakam, B., (2019), Eduthuraipiyal: Poomaniyin vekkai (First Edition), 418-432, Western critical approaches, Tamil Testimonials, Saradha Pathipagam, Chennai, India.

Panchangam, K., (2003), Modern poetry - Illustrative purpose (First Edition), Kavya Publications.

Panchangam, K., (2012), Ancient Tamil Literature in a New Theoretical Purpose (First Edition), Annam Publications, Tanjore, India.

Saravanan, T., (2010), Bharathiyar stories on narrative purpose, Ph.D Thesis, Department of Tamil, Kanchi Mamunivar Centre for Post Graduate Studies, Puducherry, India.

Siva, K., (2015), Patu Patin Eduthuraipiyal, Ph.D Thesis, Department of Tamil, The Gandhigram Rural Institute - Deemed University, Dindigul District, India.

Thirumalai, M., (2007), Literary Tour (Fifth Edition), Arivu Pathipagam, Chennai, India.

Umamaheswari, B., (2017), Udalil Eduthuraipiyal, Shanlax International Journal of Tamil Studies, 2, 150-156.
Vasanthakumar, K., (2018), Eduthuripiyal Nokil Natrinai – Kurunchithinaiyil Natrinai, Vallamai.

**Funding:** NIL

**Acknowledgement:** NIL

**Conflict of Interest:** NIL

## About the License:

Attribution 4.0 International (CC BY 4.0)

© The author 2020. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License